کفن کی واپسی (Tamil)

# கஃபன் மீண்டது

## ரஜப் மாதத்தின் வசந்தங்களுடன்



ஷெய்கே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத்,
தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,
அல்லாமா, மௌலானா அபூ பிலால்

**முஹம்மத் இல்யாஸ்**

அத்தார் காதிரீ ரஜவீ

كفَن کی واپسی

Kafan ki Wapsi

# க.:பன் மீண்டது

## ரஜப் மாதத்தின் வசந்தங்களுடன்

இந்த சிறு நூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், த.்.வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி** دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்டதாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக் கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழி பெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறிப்பு** :- *இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹன.்பி மத்ஹபின் படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

**Majlis-e-Tarajim (Dawat-e-Islami)**

Aalami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran,

Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**UAN:** ☎ +92-21-111-25-26-92 – Ext. 1262

**Email:** translation@dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ط بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ط

# புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

**இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும் போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ, வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.**

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ

عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَاالْجَلَالِ وَالْاِكْرَام

**யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!**

(அல்முஸ்தத்ர.்ப் பாகம் 1, பக்கம் 40 தாருல் .்பிக்ர், பேரூத்)

**(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்.)**

# உள்ளடக்கம்


**புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ ........ ஐ**

## கஃபன் மீண்டது ........ 1

ஸலவாத்தின் சிறப்பு ........ 1

ரஜபில் இந்த துஆ ஓதுவது சுன்னத்தாகும்! ........ 3

அல்லாஹ்வின் மாதம் ........ 3

ரஜப் மாதத்தின் வேறு பெயர்களும்
அதன் அர்த்தங்களும் ........ 4

'رَجَب' உடைய மூன்று எழுத்துக்களின் சிறப்புக்கள் ........ 5

இபாதத்தின் வித்தை விதையிடும் மாதம் ........ 6

சுவனத்தின் ஓர் ஓடையின் பெயர் ரஜபாகும் ........ 9

சுவன மாளிகை ........ 10

ஐந்து பரகத்தான இரவுகள் ........ 10

ஐந்து முக்கியமான இரவுகள் ........ 11

முதல் நோன்பு மூன்று வருட பாவங்களுக்கு
பரிகாரமாகும் ........ 13




www.dawateislami.net

நூஹ் நபியின் கப்பலில் ரஜப் மாத நோன்பின் வசந்தம் ........ 13
ஒரு நோன்பின் சிறப்பு ........ 15
அறுபது மாதங்களின் நன்மை ........ 16
நூறு வருட நோன்பின் நன்மை ........ 17
ரஜப் மாதத்தில் கவலைகளை நீக்குவதன் சிறப்பு ........ 18
27ம் இரவுடைய 12 ந஁பில்களின் சிறப்பு ........ 19
சங்கையான நான்கு மாதங்கள் ........ 20
ரஜப் மாதத்தை சங்கைப்படுத்திய பரகத்தின் சம்பவம் ........ 24
இரண்டு வருட இபாதத்தின் நன்மை ........ 26
பிரகாசமான மலை ........ 28
ரஜப் மாதத்தின் கூண்டே ........ 30
“ரஜபின் கூண்டே” எந்த திகதியில் செய்வது? ........ 33
ஸஹாபாக்கள் ஏழு நாட்கள் வரை ஈஸாலே ஸவாப் செய்தார்கள் ........ 34
ஸஹாபி தனது தாயின் பெயரில் ஒரு தோட்டத்தை ஸதகா செய்தார்கள் ........ 35

நாள் நிர்ணயம் செய்வது ........ 38

அத்தாரின் கடிதம் ........ 41

மூன்று மாத நோன்புகள் ........ 42

ரஜபுடைய ஆரம்ப மூன்று நோன்புகளின் மகிமை 43

1. மலக்குகள் பிழை பொறுக்க துஆ செய்வார்கள் .. 45

2. நோன்பாளியின் எழும்புகள் எப்போது தஸ்பீஹ்
செய்யும் ........ 45

மி.்.ராஜுன் நபி ﷺ ........ 53

கண்களை பாதுகாத்துக் கொள்ள
மதனி முத்துக்கள் ........ 53



www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰہِ رَبِّ الْعٰلَمِیْنَ وَ الصَّلٰوۃُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰہِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ؕ بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ؕ

# க.:.பன் மீண்டது

ஷைத்தான் எவ்வளவு சோம்பலை உண்டாக்கினாலும் இச்சிறுநூலை முழுமையாக வாசியுங்கள், اِنْ شَآءَاللّٰہ இதன் பிரயோஜனங்களை தானாகவே உணர்வீர்கள்.

## ஸலவாத்தின் சிறப்பு

மக்கத்து மாமன்னர், மதீனத்து மாவேந்தர் صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் நவின்றுள்ளார்கள். எவரொருவர் புத்தகத்தில் என் மீது ஸலவாத்தை எழுதினாரோ, எனது பெயர் அதிலிருக்கும் காலமெல்லாம் வானவர்கள் அவருக்காக இஸ்தி.:.பார் (பாவமன்னிப்பு) செய்துக்கொண்டே இருப்பார்கள்.

*(அல்மு.:.ஜமுல் அவ்ஸத், பாகம் 1, பக்கம் 497, ஹதீஸ் 1835)*

صَلُّوْا عَلَی الْحَبِیْب صَلَّی اللّٰہُ عَلٰی مُحَمَّد

பஸராவைச் சேர்ந்த ஒரு சிறந்த பெண்மணி தனது மரணத் தருவாயில் தன் மகனிடம், நான் ரஜப் மாதத்தில் அணிந்து கொண்டு அமல் செய்த துணியைக் கொண்டு எனக்கு க.்.பன் செய்யுங்கள் என வஸிய்யத் செய்தார். மரணத்தின் பின் அவருடைய மகன் வேறொரு துணியை கொண்டு க.்.பன் செய்து நல்லடக்கம் செய்தார். அங்கிருந்து வீடு திரும்பியதும் எந்த துணியைக் கொண்டு அவர் க.்.பன் செய்தாரோ அந்த துணி தனது வீட்டில் இருப்பதைக் கண்டு நடுங்கினார். பின்பு தனது தாய் வஸிய்யத் செய்த துணியை அச்சத்துடன் தேடியபோது அது அங்கே இருக்கவில்லை. இதற்கிடையில் மறைவான ஓர் அசரீரி கேட்டது, "உனது க.்.பனை திரும்பவும் பெற்றுக் கொள், (அவர் வஸிய்யத் செய்த) அதே துணியைக் கொண்டு நாம் அவரை க.்.பனிட்டோம். (ஏனென்றால்) யார் ரஜப் மாதத்தில் நோன்பு நோற்கின்றாரோ, நாம் அவரை கப்ரிலே கவலையில் ஆழ்த்த மாட்டோம்." *(நுZஸ்ஹதுல் மஜாலிஸ், பாகம் 1, பக்கம் 208)*

அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் கேள்வி, கணக்கின்றி நமது பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

## ரஜபில் இந்த துஆ ஓதுவது சுன்னத்தாகும்!

ரஜபுடைய மாதம் வந்துவிட்டால் அகிலத்தின் அருளாளர் அண்ணல் நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் இந்த துஆவை ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ رَجَبٍ وَّ شَعْبَانَ وَ بَلِّغْنَا رَمَضَان

அதாவது, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! ரஜபிலும், ஷ:ஃபானிலும் எங்களுக்கு நீ பரகத் செய்வாயாக, மேலும் ரமழானை அடையச் செய்வாயாக. *(அல்முஃஜமுல் அவ்ஸத் லித்தபரானி, பாகம் 3, பக்கம் 85, ஹதீஸ் 3939)*

## அல்லாஹ்வின் மாதம்

அண்ணல் நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அமுத வாக்கு:

رَجَبٌ شَهْرُ اللهِ تَعَالٰى وَ شَعْبَانُ شَهْرِى وَ رَمَضَانُ شَهْرُ اُمَّتِىْ

அதாவது, ரஜப் அல்லாஹ்வின் மாதம் இன்னும் ஷ:்பான் எனது மாதம் இன்னும் ரமழான் எனது உம்மத்துடைய மாதமாகும். *(அல்:்பிர்தௌஸ் பிம:்தூரில் கிதாப், பாகம் 2, பக்கம் 275, ஹதீஸ் 3276)*

## ரஜப் மாதத்தின் வேறு பெயர்களும் அதன் அர்த்தங்களும்

'ரஜப்' என்பது தர்ஜீப் என்ற மூலச் சொல்லில் இருந்து வெளியானது. அதன் பொருள் 'மரியாதை செய்தல்' என்பதாகும். இதற்கு அல்அஸப் (வேகமான நீரோட்டம்) என்றும் சொல்லப்படும். ஏனென்றால் இந்த முபாரக்கான மாதத்தில் தௌபா செய்பவர்களுக்கு ரஹ்மத்துக்களை அதிகமாக சொரியப்படுவதோடு, மேலும் வணக்கசாலிக ளின் இபாதத்துக்களை அதிகமாக ஒப்புக் கொள்ளப்படும். இதற்கு அல்அஸம் (செவிடு) என்றும் சொல்லப்படும். ஏனென்றால் இதில் யுத்தங்களின் சப்தங்கள் அறவே

கேட்கப்படமாட்டாது. *(முகாஷ∴பதுல் குலூப், பக்கம் 301)* இந்த மாதத்திற்கு ‘ஷஹ்ரே ரஜம்’ என்றும் சொல்லப்படும். ஏனெனில் இந்த மாதத்தில் முஸ்லிம்களுக்கு நோவினை அளிக்காமல் இருப்பதற்காக ஷைத்தானுக்கு கல்லால் அடிக்கப்படுகிறது. *(குன்யதுல் தாலிபீன், பாகம் 1, பக்கம் 319, 320)*

## ‘رَجَب’ உடைய மூன்று எழுத்துக்களின் சிறப்புக்கள்

سُبْحٰنَ اللّٰه!இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! ரஜப் மாதத்தின் வசந்தங்கள் ஏராளம் ஏராளம். முகாஷ∴பதுல் குலூபில் வருகிறது, மார்க்க அறிஞர்கள் رَحِمَهُمُ اللّٰه கூறுகிறார்கள். ரஜப் என்பதில் மூன்று எழுத்துக்கள் உள்ளன, அதாவது ب, ج, ر, ‘ر’ என்பதன் நோக்கம் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் ரஹ்மத், ‘ج’ என்பது அடியானுடைய குற்றம், ‘ب’ என்பது بِرّ அதாவது ஆதரவு, நன்மை போன்றதாகும்.

அல்லாஹ் عَزَّوَجَلَّ கூறுவது போன்று: எனது அடியானின் பாவத்தை எனது ரஹ்மத் மற்றும் ஆதரவுக்கிடையில் ஆக்கி விடுங்கள்.
*(முகாஷ:ஃபதுல் குலூப், பக்கம் 301)*

*பாவத்திலிருந்து நாம் ஒருபோதும் ஒதுங்கவில்லை*
*ஆனால் நீ நமதுள்ளத்தை துயரப்படுத்தவில்லை*

*நாம் நரகத்தின் வேலைகளை மிகவும் செய்தோம்*
*ஆனால் உனதருள் அதனை விரும்பவில்லை*

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

## இபாதத்தின் வித்தை விதையிடும் மாதம்

ஹழ்ரத் ஸய்யிதுனா அல்லாமா ஸ:ஃப்பூரி رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள். ரஜப் மாதம் விதையிடுதல், ஷ:ஃபான் மாதம் நீர்ப்பாய்ச்சுதல் மேலும் ரமழான் அறுவடை செய்யும் மாதமாகும். எனவே யார் ரஜப் மாதத்தில் இபாதத்தின் வித்தை விதையிடவில்லையோ, ஷ:ஃபான் மாதத்தில் கண்ணீரின் மூலம் அதற்கு நீர் புகட்ட வில்லையோ அவர் ரமழான் மாதத்தில்

ரஹ்மத்தை எவ்வாறு அறுவடை செய்ய முடியும்? மேலும் குறிப்பிடுகிறார்கள், ரஜப் மாதம் உடலையும், ஷஃபான் மாதம் உள்ளத்தையும் மேலும் ரமழான் மாதம் ரூஹையும் சுத்தப்படுத்துகிறது. *(நுZஸ்ஹதுல் மஜாலிஸ், பாகம் 1, பக்கம் 209)*

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! ரஜப் மாதத்தில் நோன்பு மற்றும் ஏனைய இபாதத்துக்களின் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு தஃவதே இஸ்லாமியின் மதனி சூழலுடன் இணைந்து கொள்ளுங்கள். சுன்னத்துக்களின் பயிற்சியளிக்கும் மதனி காஃபிலாக்களின் பிரயாணியாக ஆகுவதோடு, தஃவதே இஸ்லாமியினால் ஏற்பாடு செய்யப்படும் ரமழான் மாத இஜ்திமாஈ இஃதிகாஃபில் கலந்துக் கொள்ளுங்கள். إِنْ شَآءَاللّٰه உங்கள் வாழ்க்கையில் மதனி மாற்றங்கள் ஏற்படும்.

உற்சாகமூட்டுவதற்காக ஒரு மதனி வசந்தத்தை கூறுகிறேன், ஃபத்ஹே பூர் கமால் (ரஹீம்

யார்கான், பஞ்சாப், பாகிஸ்தான்) ஐ சார்ந்த ஓர் இஸ்லாமிய சகோதரர் கூறுகிறார். நான் மதனி சூழலுடன் இணைவதற்கு முன் தொழுகையை விடாமல் தொழுபவனாக இருந்தேன், ஆனாலும் பல பாவங்களின் பழக்கம் இருந்தது. உதாரணமாக, பாடல் கேட்டல், படம், நாடகம் பார்த்தல், சீட்டு விளையாடுதல் இதுபோன்றவை. நான் கல்லூரி செல்லும் போதெல்லாம் எனது சைக்கிளை ஓர் இஸ்லாமிய சகோதரரின் கடையில் வைத்து விட்டு செல்வேன். ரஜப் மாதத்தில் ஒரு நாள் எனது சைக்கிளை கடையில் நிறுத்தும் போது அந்த இஸ்லாமிய சகோதரர் மி∴ராஜுடைய இரவில் நடாத்தப்படும் திக்ர், கஸீதாவின் இஜ்திமாவுக்கு அழைப்பு விடுத்த போது, நான் அதை ஒப்புக் கொண்டு அன்றிரவு அருகிலுள்ள அவ்வூருக்கு தனியாக சென்று, முழு இரவும் திக்ர், கஸீதாவின் இஜ்திமாவில் கலந்துக் கொண்டேன். எனக்கு அந்த இஜ்திமாவில் மிகவும் நிம்மதி கிடைத்ததால், வாராந்த இஜ்திமாவில் தொடர்ந்து நான் கலந்துக் கொள்ள ஆரம்பித்து

விட்டேன். அதற்கு மத்தியில் முபாரக்கான ரமழான் மாதமும் வந்து விட்டது. இஸ்லாமிய சகோதரர்கள் தனித்துவ முயற்சியின் மூலம் கடைசி பத்து நாட்களின் இஃதிகாபுக்காக என்னை ஆயத்தமாக்கி விட்டார்கள். இஃதிகாபில் எனக்கு அதிகமான விடயங்களை கற்றுக் கொள்ள கிடைத்தது. اَلْحَمْدُ لِلّٰه எனக்கு பாவங்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நான் இஃதிகாபில் தாடியை வைத்ததோடு, தலைப்பாகை எனும் கிரீடத்தையும் அணிந்து விட்டேன். இதை எழுதும் நேரத்தில் ஒரு பிரிவின் மதனி இன்ஆமாத் பொறுப்பாளியாக உள்ளேன். அல்லாஹ் عَزَّوَجَلَّ இந்த மதனி சூழலில் நிலைத்திருக்கச் செய்வானாக!

## சுவனத்தின் ஓர் ஓடையின் பெயர் ரஜபாகும்

ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் பின் மாலிக் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி பெருமானார் صَلَّى اللّٰه عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக, “சுவர்க்கத்தில் ஓர் ஓடை இருக்கிறது, அதற்கு “ரஜப்” என்று

சொல்லப்படும். அது பாலை விட அதிக வெண்மையாகவும், தேனை விட அதிக சுவையாகவும் இருக்கும். எவரொருவர் ரஜப் மாதத்தில் ஒரு நோன்பு நோற்கிறாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அவருக்கு அவ்வோடையிலிருந்து புகட்டுவான்.” *(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 367, ஹதீஸ் 3800)*

## சுவன மாளிகை

தாபிஈ மகான் ஹழ்ரத் ஸய்யிதுனா அபூகிலாபா رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள். ரஜபுடைய நோன்பாளிகளுக்காக சுவனத்தில் ஒரு மாளிகை உள்ளது. *(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 368, ஹதீஸ் 3802)*

## ஐந்து பரகத்தான இரவுகள்

நபி பெருமானார் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக ஹழ்ரத் ஸய்யிதுனா அபூஉமாமா رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள். “ஐந்து இரவுகள் இருக்கின்றன, அதில் துஆக்கள்

மறுக்கப்படுவதில்லை. (1) ரஜப் மாதத்தின் முதலாம் (பிறையுடைய) இரவு (2) ஷ.ீ.பான் மாதத்தின் 15வது (பராஅத்) இரவு (3) வெள்ளிக்கிழமை இரவு (அதாவது வியாழன் மற்றும் வெள்ளிக்கு இடைப்பட்ட இரவு) (4) நோன்புப் பெருநாளின் (பிறையுடைய) இரவு (5) ஹஜ்ஜுப் பெருநாளின் (துல்ஹஜ் பத்தாம்) இரவு.”

*(தாரிஹுல் திமிஷ்க் லிப்னி அஸாகிர், பாகம் 10, பக்கம் 408)*

## ஐந்து முக்கியமான இரவுகள்

ஹழ்ரத் ஸய்யிதுனா காலித் பின் ம.ீ.தான் رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள். வருடத்தில் ஐந்து இரவுகள் இவ்வாறு உள்ளன, யார் அவைகளை உண்மைப்படுத்தி ஸவாபுடைய நிய்யத்துடன் இபாதத்தில் கழிக்கின்றாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அவரை சுவனத்தில் நுழைய வைப்பான்.

1. ரஜப் மாதத்தின் முதலாவது இரவு, அதாவது இரவில் இபாதத்தும், பகலில் நோன்பு நோற்பதுமாகும்.

2. ஷ"பானுடைய 15வது (அதாவது பராஅத்துடைய) இரவு, அதாவது இரவில் இபாதத்தும், பகலில் நோன்பு நோற்பதுமாகும்.

3-4. இரண்டு பெருநாட்களின் இரவுகள் (நோன்புப் பெருநாளின் (பிறை) இரவு மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் அதாவது துல்ஹஜ் 9க்கும் 10க்கும் இடைப்பட்ட இரவு) அதாவது இரவுகளில் இபாதத் செய்வதும், பகலில் நோன்பு நோற்காமல் இருப்பதுமாகும். (இரண்டு பெருநாள் தினங்களிலும் நோன்பு நோற்பது கூடாது)

5. ஆசூராவுடைய இரவு (அதாவது முஹர்ரம் 10வது இரவு) அதாவது இரவில் இபாதத்தும், பகலில் நோன்பு நோற்பதுமாகும். *(அல்பத்ருல் முனீர் லிப்னில் முலக்கின், பாகம் 5, பக்கம் 40, குன்யதுத் தாலிபீன், பாகம் 1, பக்கம் 327)*

## முதல் நோன்பு மூன்று வருட பாவங்களுக்கு பரிகாரமாகும்

அண்ணல் நபி صَلَّى اللهُ عَلَيۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அமுத வாக்கு: “ரஜப் மாதத்தின் முதலாவது நாளின் நோன்பு மூன்று வருடங்களுக்குப் பரிகாரமாகும், இரண்டாவது நாளின் நோன்பு இரண்டு வருடங்களுக்கும், மூன்றாவது நாளின் நோன்பு ஒரு வருடத்திற்கும் பரிகாரமாகும். பின்பு ஒவ்வொரு தினங்களின் நோன்பும் ஒரு மாதத்திற்குப் பரிகாரமாகும்.” *(அல்ஜாமிஉஸ் ஸகீர் லிஸ் ஸுயூத்தி, பக்கம் 311, ஹதீஸ் 5051, ஃபழாயிலு ஷஹ்றி ரஜப் லில் கல்லால், பக்கம் 64)*

இங்கு “பாவங்களுக்கு பரிகாரமாகும்” என்பதன் அர்த்தம், இந்த நோன்பு சிறு பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது.

## நூஹ் நபியின் கப்பலில் ரஜப் மாத நோன்பின் வசந்தம்

நபி பெருமானார் صَلَّى اللهُ عَلَيۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள்

கூறியதாக ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் رَضِیَ اللّٰہُ عَنْہُ அவர்கள் அறிவிக்கின்றார்கள். “எவரொருவர் ரஜப் மாதத்தில் ஒரு நோன்பு நோற்கிறாரோ அது ஒரு வருட நோன்பை போன்றதாகும். யார் ஏழு நோன்பு நோற்கிறாரோ அவருக்கு நரகத்தின் ஏழு வாயல்களும் மூடப்பட்டு விடுவதோடு, யார் எட்டு நோன்பு நோற்கிறாரோ அவருக்காக சுவர்க்கத்தின் எட்டு வாயல்களும் திறக்கப்பட்டு விடும். யார் பத்து நோன்பு நோற்கிறாரோ, அவர் அல்லாஹ் عَزَّوَجَلَّ விடத்தில் எதைக் கேட்கிறாரோ அல்லாஹ் عَزَّوَجَلَّ அதை வழங்கி விடுவான், இன்னும் யார் பதினைந்து நோன்பு நோற்கிறாரோ வானத்திலிருந்து ஓர் அழைப்பாளர் அறிவித்தல் விடுகிறார், அதாவது உனது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன, நீ புதிதாக நன்மைகளை செய்ய ஆரம்பி, உனது கெடுதிகளை நன்மைகளாக மாற்றப்பட்டு விட்டது. இன்னும் யார் அதிகமாக்குகிறார்களோ அல்லாஹ் عَزَّوَجَلَّ அவருக்கு அதிகமாக வழங்குவான். மேலும் ரஜப் மாதத்தில் நூஹ் (عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام) அவர்கள் கப்பலில் பிரயாணிக்கும் போது, தானும் நோன்பு நோற்று தனது கூட்டத்தையும் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள். அவர்களது

கப்பல் முஹர்ரம் பத்தாம் நாள் வரை ஆறு மாத காலம் பிரயாணத்தில் இருந்தது. (ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 368, ஹதீஸ் 3801)

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

## ஒரு நோன்பின் சிறப்பு

நபி பெருமானார் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பொன்மொழி ஒன்றை ஹழ்ரத் அல்லாமா ஷேஹ் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் எழுதுகிறார்கள். ரஜப் மாதம் சங்கைமிகுந்த மாதங்களில் ஒன்றாகும். மேலும் ஆறாம் வானத்தின் கதவில் இந்த மாதத்தினுடைய நாட்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. யாராவது ஒருவர் ரஜப் மாதத்தில் ஒரு நோன்பு நோற்று அதை உள்ளச்சத்துடன் பூர்த்தி செய்தால் அந்த கதவும், அந்த (நோன்புநோற்ற) நாளும் அம்மனிதருக்காக அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம், யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! இந்த அடியானை மன்னித்து விடுவாயாக என்று

பாவமன்னிப்புக் கோரும். மேலும் அந்த மனிதர் உள்ளச்சமின்றி நோன்பை கழித்தால் அந்த கதவும், அந்த நாளும் அவருக்காக பாவமன்னிப்பு கோராமல் அவனை பார்த்து “அடியானே! உன்னுடைய ந஼ப்ஸ் உன்னை ஏமாற்றி விட்டது.” என்று கூறும். *(மாஸபத பிஸ்ஸுன்னா, பக்கம் 234, ஃபழாயிலு ஷஹ்றி ரஜப் லில் கல்லால், பக்கம் 56)*

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! நோன்பின் நோக்கம் பசி, தாகத்துடன் இருப்பது மாத்திரமல்ல, அனைத்து உறுப்புக்களையும் பாவங்களிலிருந்து பாதுகாப்பதுமாகும் என்பதை அறிந்துக் கொண்டோம். நோன்பு நோற்றுக்கொண்டும் பாவங்கள் தொடருமானால் அது மிகவும் துர்பாக்கியமான செயலாகும்.

## அறுபது மாதங்களின் நன்மை

ஹழ்ரத் ஸய்யிதுனா அபூஹுரைரா رَضِیَ اللّٰہُ عَنْہُ அவர்கள் அறிவிக்கிறார்கள். எவரொருவர் ரஜப் மாதத்தின் 27ம் நாள் நோன்பு நோற்கிறாரோ,

அல்லாஹுதஆலா அவருக்காக 60 மாத நோன்புகளின் நற்கூலியை எழுதி விடுகிறான். *(்.பழாயிலு ஷஹ்றி ரஜப் லில் கல்லால், பக்கம் 76)*

## நூறு வருட நோன்பின் நன்மை

ரஜப் மாதத்தின் 27ம் நாளின் மகத்துவத்தை என்னவென்று கூறுவது! அந்த நாளில்தான் இன்னுயிர் முஸ்த.்.பா صَلَّى اللّٰه عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுக்கு சிறப்பான மி.்.ராஜுடைய மகத்துவமிக்க மு.்.ஜிZஸா அருளப்பட்டது. *(ஸர்ஹுஸ் Zஸுர்கானி அலல் மவாஹிபில் லதுன்னியா, பாகம் 8, பக்கம் 18)*

எனவே ரஜப் மாதத்தின் 27ம் நாளுடைய நோன்பிற்கு அதிக சிறப்புண்டு. எவ்வாறெனில், ஹழ்ரத் ஸய்யிதுனா ஸல்மானுல் ்.பாரிஸி رَضِیَ اللّٰه عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார் கள். அல்லாஹ்வின் عَزَّوَجَلَّ அன்பாளர், மறைவானவற்றை அறிந்தவர், குறைகளற்ற தூயவர், நபிகள் பெருமானார் صَلَّى اللّٰه عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், “ரஜப்

மாதத்தில் ஒரு பகலும், இரவும் உள்ளது, யார் அந்த பகலில் நோன்பும், இரவில் நின்று வணங்கவும் (இபாதத்தும்) செய்கிறாரோ அவர் நூறு வருடம் நோன்பு நோற்றவரையும், நூறு வருடம் நின்று வணங்கியவரையும் போலாவார். மேலும் இது ரஜப் மாதத்தின் இருபத்தேழாம் நாளாகும்.” *(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 374, ஹதீஸ் 3811)*

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

## ரஜப் மாதத்தில் கவலைகளை நீக்குவதன் சிறப்பு

ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் Zஸுபைர் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள். “யார் ரஜப் மாதத்தில் ஒரு முஸ்லிமுடைய கவலையை நீக்குகிறாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அவருக்கு சுவனத்தில் ஒரு மாளிகையை வழங்குவான், அது கண்ணுக்கு எட்டிய தூரம் விசாலமாக இருக்கும். ரஜப் மாதத்தை நீங்கள்

சங்கைப்படுத்துங்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ உங்களை ஆயிரம் கராமாத்துக்களுடன் சங்கைப்படுத்துவான். *(குன்யதுத் தாலிபீன், பாகம் 1, பக்கம் 324, மு:ஜமுஸ் ஸ:பர் லிஸ் ஸல்:பி, பக்கம் 419, எண் 1421)*

## 27ம் இரவுடைய 12 ந:பில்களின் சிறப்பு

ரஜப் மாதத்தில் ஓர் இரவுள்ளது, அதில் நல்அமல் செய்பவர்களுக்கு நூறு வருட அமல்களின் நற்கூலி கிடைக்கும், அது ரஜப் மாதத்தின் இருபத்தேழாம் இரவாகும். யார் அதில் 12 ரக்அத்துக்களை இவ்வாறு தொழுகிறாரோ, அதாவது ஒவ்வொரு ரக்அத்திலும் சூரதுல் பாத்திஹாவும், இன்னும் ஏதாவதொரு சூராவும் ஓதுவதோடு, ஒவ்வொரு இரண்டாம் ரக்அத்திலும் அத்தஹிய்யாத் ஓதி, 12 ரக்அத் பூர்த்தியானதும் ஸலாம் கொடுக்கவும், அதன் பின் 100 தடவைகள் سُبْحٰنَ اللهِ وَالْحَمْدُ لِلهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَر என்ற கலிமாவும், 100 தடவைகள் இஸ்தி:பாரும், 100 தடவைகள் ஸலவாத்தும்

கூறி, துன்யா, ஆகிரத்தின் எந்த விடயத்தை வேண்டுமானாலும் துஆ கேட்டுவிட்டு, காலையில் நோன்பு நோற்றால், அல்லாஹ் عَزَّوَجَلَّ அவருடைய அனைத்து துஆக்களையும் நிறைவேற்றுவான். கெட்ட விடயங்களுக்காக கேட்ட துஆவை தவிர. *(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 374, ஹதீஸ் 3812)*

## சங்கையான நான்கு மாதங்கள்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ விடத்தில் நான்கு மாதங்கள் மிகவும் சங்கையானதாகும். இதைப்பற்றி 10ம் ஜுஸ்உ, சூரதுத் தௌபா, 36ம் ஆயத்தில் கூறப்பட்டுள்ளது,

اِنَّ عِدَّةَ الشُّهُوْرِ عِنْدَ اللّٰهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِیْ كِتٰبِ اللّٰهِ یَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ مِنْهَاۤ اَرْبَعَةٌ حُرُمٌ ؕ ذٰلِكَ الدِّیْنُ الْقَیِّمُ ۙ۬ فَلَا تَظْلِمُوْا فِیْهِنَّ

اَنْفُسَكُمْ وَقَاتِلُوا الْمُشْرِكِيْنَ كَآفَّةً كَمَا يُقَاتِلُوْنَكُمْ كَآفَّةً ؕ وَاعْلَمُوْٓا اَنَّ
اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ ﴿۳۶﴾

**தர்ஜுமா கன்ZஸுIல் ஈமான்:** வானங்களையும் பூமிகளையும் படைத்த நாளில் அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை 12 மாதங்களாகும். அவற்றில் நான்கு புனிதமானவையாகும். இதுதான் நேரான மார்க்கமாகும். ஆகவே அவற்றில் உங்களுக்கு நீங்களே அநீதமிழைத்துக் கொள்ளாதீர்கள். அவர்கள் ஒருங்கிணைந்து உங்களுடன் போர் செய்வது போல் நீங்களும் ஒருங்கிணைந்து இணை வைப்பவர்களுடன் போர் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையவர்களுடன் இருக்கிறான் என்பதை உறுதியாக அறிந்துக் கொள்ளுங்கள்.

மேற்கூறப்பட்ட ஆயத்தின்கீழ் ஹழ்ரத் அல்லாமா மௌலானா ஸய்யித் முஹம்மத் நஈமுத்தீன் முராதாBபாதி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் “கZஸாஇனுல்

இர்ஃபானில்” குறிப்பிடுகிறார்கள். (நான்கு சங்கையான மாதங்கள் என்றால்) தொடராக வரக் கூடிய மூன்று துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் மேலும் ஒன்று தனித்து வரக்கூடிய ரஜப். அராபியர்கள் ஜாஹிலிய்யாக் காலத்திலும் கூட இதில் யுத்தம் செய்வது ஹராம் என்று அறிந்திருந்தார்கள். இஸ்லாத்தில் இம்மாதங்களின் மகிமை, கண்ணியம் மேலும் உயர்த்தப்பட்டது. *(கZஸாஇனுல் இர்பான், பக்கம் 362)*

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இந்த முபாரக்கான ஆயத்தில் பிறையுடைய (ஹிஜ்ரி கணக்கின் 12) மாதங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது, அது சந்திரனைக் கொண்டு கணக் கிடப்படும். அதிகமான மார்க்க சட்டங்களின் அடிப்படை களும் பிறை கணக்கைக் கொண்டே இருக்குகிறது. உதாரணமாக, ரமழானின் நோன்பு, ஸகாத், ஹஜ்ஜுடைய விடயங்கள் இதுபோன்றவை. அதேபோல் இஸ்லாமிய விழாக்கள் உதாரணமாக, மீலாதுன்

நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم, நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், மிஃராஜ் இரவு, பராஅத் இரவு, 11ஆம் இரவு (கௌது நாயகத்தின் நினைவு தினம்), வலிமார்களின் رَحِمَهُمُ اللّٰه ஞாபகார்த்த தினங்கள் இதுபோன்றவைகளும் பிறை கணக்கின் மாதங்களைக்கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. கைசேதமே! இக்காலத்தில் முஸ்லிம்கள் அதிகமான சுன்னத்துக்களை விட்டும் தூரமாகுவதுடன் இஸ்லாமிய தினங்களையும் முழுமையாக மறந்து விட்டார்கள். பெரும்பாலும் ஓர் இலட்சம் முஸ்லிம்கள் ஒன்று சேரும் இடத்தில் இந்த கேள்வி, அதாவது “கூறுங்கள் இன்று ஹிஜ்ரி ஆண்டின் என்ன மாதம், எத்தனையாம் திகதி?” என கேட்கப்பட்டால், சிலசமயம் பெறும் கஷ்டத்துடன் நூறு முஸ்லிம்கள் சரியாக பதிலளிப்பவர்களாக இருப்பார்கள்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! அதிகமான விடயங்கள் உதாரணமாக, ஸகாத்தின் கடமை

போன்ற விடயங்களை பிறை கணக்கின் மாதங்களைக்கொண்டு பார்ப்பது பர்ளாகும்.

## ரஜப் மாதத்தை சங்கைப்படுத்திய பரகத்தின் சம்பவம்

ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்களுடைய காலத்தின் சம்பவம், அதாவது ஒரு மனிதன் ஒரு பெண்ணை பல காலமாக ஆசைப்பட்டு ஒரு நாள் அவளை பற்றிக்கொண்டான். மனிதர்கள் ஒன்று கூடியிருப்பதைப் பார்த்து, அவர்கள் பிறை பார்க்கிறார்கள் என்பதை ஊகித்து, அப்பெண்ணிடம் மனிதர்கள் எந்த மாதத்திற்குரிய பிறையை பார்க்கிறார்கள்? என்று கேட்டபோது, “ரஜப்” என பதிலளித்தாள், அதைக் கேட்ட முஸ்லிமல்லாத அம்மனிதன் ரஜப் மாதத்தின் பெயரை கேட்டதும், சங்கைக்காக அவளை விட்டும் உடனே தூரமாகி, கெட்ட செயலை விட்டும் விலகி விட்டான். ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام

அவர்களுக்கு நமது இந்த அடியானை சந்திக்குமாறு ஏவப்பட்டதும், ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா عَلٰى نَبِيِّنَا وَ عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَام அங்கே சென்று, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் கட்டளை, மற்றும் தான் வருகை தந்த காரணத்தையும் கூறினார்கள். அதைக் கேட்டதும் அவனுடைய உள்ளத்தில் இஸ்லாத்தின் ஒளி உண்டாகி, உடனே இஸ்லாத்தை தழுவிக் கொண்டான். *(அனீஸுல் வாஇளீன், பக்கம் 177)*

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! ரஜப் மாதத்தின் வசந்தங்களை பார்த்தீர்களா! ரஜப் மாதத்தை சங்கைப்படுத்தி யதால் முஸ்லிம ல்லாத ஒருவனுக்கு ஈமானுடைய பாக்கியம் கிடைக்க முடியுமென்றால், எந்த முஸ்லிம்கள் ரஜப் மாதத்தை சங்கைப்படுத்துகிறார்களோ, அவர்களுக்கு என்னென்ன பாக்கியம் கிடைக்கும்! பரிசுத்த குர்ஆனிலும் சங்கையான மாதத்தில்

தனக்குத்தானே அநியாயம் இழைப்பதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளது. அதாவது,

فَلَا تَظْلِمُوْا فِيْهِنَّ اَنْفُسَكُمْ

(**தர்ஜுமா கன்Zஸுல் ஈமான்:** *எனவே இந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே அநீதமிழைத்துக் கொள்ளதீர்கள்.) என்பதன் கீழ் நூருல் இர்ஃபானில் வந்துள்ளது, “அதாவது குறிப்பாக இந்த நான்கு மாதங்களிலும் பாவங்கள் செய்ய வேண்டாம்.”* (*நூருல் இர்ஃபான், பக்கம் 306*)

## இரண்டு வருட இபாதத்தின் நன்மை

ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் رَضِیَ اللّٰہ عَنْہُ அவர்கள் அறிவிக்கி றார்கள், நபி பெருமானார் صَلَّی اللّٰہ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக, “எவரொருவர் சங்கையான மாதத்தில் மூன்று நாட்கள் அதாவது வியாழன், வெள்ளி, சனி போன்ற நாட்களில் நோன்பு நோற்கிறாரோ, அவருக்கு இரண்டு வருட இபாதத்தின் நன்மை

எழுதப்பட்டு விடுகிறது." *(அல்முஃஜமுல் அவ்ஸத் லித்தபரானி, பாகம் 1, பக்கம் 485, ஹதீஸ் 1789)*

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! இங்கு "சங்கையான மாதம்" என்பதன் நோக்கம் இதே நான்கு மாதங்களாகும், அதாவது துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப். இந்த நான்கு மாதங்களில் எந்த மாதத்திலாவது மேற்கூறப்பட்ட மூன்று நாட்களின் நோன்புகளை நோற்றால் اِنْ شَآءَاللّٰه இரண்டு வருட இபாதத்தின் நன்மையை பெறலாம்.

*தேரெ கரம் சே ஏ கரீம்! முஜே கோன்ஸி ஷே மிலி நெஹி ஜோலீஹி மேரி தன்ங் ஹெ, தேரெ யஹாங் கம்மி நெஹி*

*(கிருபையாளனே! உனது கிருபையால் எனக்கு என்னதான் கிடைக்கவில்லை, எனது மடிதான் நெருக்கமாக உள்ளது, உன்னிடம் எந்த குறைவுமில்லை)*

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

## பிரகாசமான மலை

ஒரு முறை ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்கள் ஒரு பிரகாசமான மலைக்கு அருகாமையில் நடந்து சென்றபோது, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! இந்த மலைக்கு பேசும் சக்தியை வழங்கி விடு என இறைவனிடத்தில் கேட்டார்கள், அப்போது அம்மலை யா ரூஹுல்லாஹ்! (عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام) நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என கேட்டபோது, உனது நிலையை கூறு? என அவர்கள் கூறியதும், “என்னுள்ளே ஒரு மனிதர் வாழ்கிறார்” என மலை கூறியது. அப்போது ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்கள் இறைவனிடத்தில் யாஅல்லாஹ் عَزَّوَجَلَّ! அம்மனிதரை எனக்கு வெளிப்படுத்துவாயாக என கேட்டதும், தீடீரென மலை இரண்டாகப் பிளந்து அதிலிருந்து சந்திரனைப் போல் பிரகாசிக்கும் முகத்துடன் ஒரு பெரியார் வந்து கூறினார்கள், “நான் ஹழ்ரத் ஸய்யிதுனா மூஸா கலீமுல்லாஹ் (عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام)

அவர்களின் உம்மத்தாவேன், அல்லாஹ் عَزَّوَجَلَّ விடத்தில் நான் இவ்வாறு பிரார்த்தனை செய்துள்ளேன், அதாவது தனது ஹபீப், இறுதி நபியாகிய பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தோன்றும் வரை என்னை உயிரோடு வைப்பாயாக, ஏனெனில் நான் அன்னவர்களையும் சந்திப்பதோடு, அன்னவர்களின் உம்மத்தாகும் பாக்கியமும் பெற வேண்டும். اَلْحَمْدُ لِلّٰه நான் இந்த மலையில் அறுநூறு வருடங்களாக அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் இபாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்." பின்பு ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْهِ الصَّلٰوةُ وَالسَّلَام அவர்கள், யாஅல்லாஹ் عَزَّوَجَلَّ இவ்வுலகில் இந்த மனிதரை விட உன்னிடத்தில் சங்கைமிக்க அடியார்கள் யாரேனும் உண்டா? என்று இறைவனிடத்தில் கேட்டபோது, அறிவிக்கப்பட்டது, ஈஸாவே! (عَلَيْهِ السَّلَام) உம்மதே முஹம்மதியாவில் யார் ரஜப் மாதத்தில் ஒரு நோன்பு நோற்கிறாரோ அவர் என்னிடத்தில் இவரைவிட சங்கையானவராவார். (நுzஸ்ஹதுல் மஜாலிஸ், பாகம் 1, பக்கம் 208)

அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் கேள்வி, கணக்கின்றி நமது பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

اٰمِيْن بِجَاهِ النَّبِيّ الْاَمِيْن صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

## ரஜப் மாதத்தின் கூண்டே

ஸத்ருஷ் ஷரீஆ, பத்ருத் தரீகா, ஹழ்ரத் அல்லாமா, மௌலானா மு஼ப்தி முஹம்மத் அம்ஜத் அலி அ஼ளமி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள், ரஜப் மாதம் சில இடங்களில் ஹழ்ரத் (ஸய்யிதுனா) இமாம் ஜ஼பர் ஸாதிக் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களது ஈஸாலே ஸவாபுக்காக கீர், பூரி செய்வார்கள், இதுவும் கூடும். ஆனால் இதிலும் அதே இடத்தில்தான் சாப்பிட வேண்டுமென சிலர் கட்டுப்பாடு போட்டுள்ளார் கள், இது அர்த்தமற்ற கட்டுப்பாடாகும். இந்த கூண்டே என்பதைப்பற்றி **“தாஸ்தானெ அஜீப்”** எனும் ஒரு கிதாபும்

உள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சில மனிதர்கள் இதை படிக்க வைப்பார்கள். இதில் எழுதப்பட்டுள்ள விடயங்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை, ஆக இதை படிக்க வேண்டாம். பாத்திஹா ஓதி ஈஸாலே ஸவாப் செய்யுங்கள். *(பஹாரே ஷரீஅத், பாகம் 3, பக்கம் 643)* அதேபோல் "பத்து மனைவிமார்களுடைய கதை", "விறகு வெட்டியுடைய கதை" மேலும் "ஹழ்ரத் ஸய்யிதாவுடைய கதை" இவை அனைத்தும் இட்டுக்கட்டப்பட்ட கதைகளாகும். எனவே அவற்றை வாசிக்காமல், அதற்குப் பதிலாக ஒரு தடவை சூரா யாஸீனை ஓதுங்கள், பத்து குர்ஆனை ஓதி முடித்த நன்மை கிடைக்கும். இதுவும் ஞாபகத்தில் இருக்கட்டும், அதாவது கூண்டேவிலே (மண் பாத்திரத்தில்) கீர் சாப்பிடுவது, சாப்பிட வைப்பது கடமையல்ல, வேறு பாத்திரங்களில் சாப்பிடவும், சாப்பிட வைக்கவும் முடியும். ஈஸாலே ஸவாப் (நன்மையை சேர்ப்பித்தல்) குர்ஆன், ஹதீஸின் மூலம் உறுதியான விடயமாகும்.

ஈஸாலே ஸவாப் துஆவின் மூலமாகவும் இன்னும் உணவு வகைகளை சமைத்து அதில் பாத்திஹா ஓதியும் செய்யலாம். கூண்டே பங்கிடுவதும் ஈஸாலே ஸவாபின் ஒரு விதமாகும். இதை கூடாது என்று கூறுவது ஷரீஅத்திற்கு அவதூறு கூறுவதா கும். அவ்வாறு கூறுபவர்கள் 7ம் ஜுஸ்உ, சூரதுல் மாஇதா 87வது ஆயத்தில் கூறப்பட்டிருக்கும் இறைவனின் கட்டளையைப் பாரத்து படிப்பினை பெறுங்கள், அதாவது,

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُحَرِّمُوْا طَيِّبٰتِ

مَاۤ اَحَلَّ اللّٰهُ لَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ﴿۸۷﴾

**தர்ஜுமா கzன்ஸுல் ஈமான்:** ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு ஹலாலாக்கி வைத்திருக்கும் பரிசுத்தமானவைகளை, நீங்கள் ஹராமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள், இன்னும் நீங்கள் வரம்பு மீறியும் செல்லாதீர்கள், நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதே இல்லை.

## “ரஜபின் கூண்டே” எந்த திகதியில் செய்வது?

ரஜப் மாதம் முழுவதும், மாறாக முழு வருடத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் ஈஸாலே ஸவாபுக்காக கூண்டே செய்து பங்கிடலாம். பொதுவாக ரஜப் 15 இல் “ரஜபின் கூண்டே” செய்வது நல்லது. ஏனெனில் இது அவர்களது ஞாபகார்த்த தினமாகும். ஃபதாவா ஃபகீஹே மில்லத், பாகம் 2, பக்கம் 265 இல் குறிப்பிடப்பட்டுள்ளது: “ஹழ்ரத் (ஸய்யிதுனா) இமாம் ஜஃபர் ஸாதிக் رضی اللہ عنہ அவர்களது நயாzஸ் (கந்தூரி) ரஜப் 15 இல் செய்யுங்கள். ஏனெனில் ஹழ்ரத் அவர்களின் மறைவு 15 இல் தான் இடம்பெற்றது.” அதேபோல் மக்தபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட **ஷரஹ் ஷஜரா காதிரிய்யா** எனும் நூலின் 59 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது: இமாம் رضی اللہ عنہ அவர்களுக்கு 68 ஆம் வயதில் ரஜப் 15, ஹிஜ்ரி 148 இல் உள்ளம் மோசமான ஒரு அநியாயக்காரன் நஞ்சை கொடுத்தான், அதுவே அவர்கள் ஷஹீதாவதற்கு காரணமானது. அவர்களது رضی اللہ عنہ அடக்கஸ்தலம்

ஜன்னதுல் பகீயில் (மதீனா முனவ்வரா) கண்ணியமிக்க தந்தையாகிய ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் பாகிர் رَضِیَ اللّٰہُ عَنْہُ அவர்களுக்கு பக்கத்தில் உள்ளது.

அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் கேள்வி, கணக்கின்றி நமது பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

اٰمِیْن بِجَاہِ النَّبِیِّ الْاَمِیْن صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم

## ஸஹாபாக்கள் ஏழு நாட்கள் வரை ஈஸாலே ஸவாப் செய்தார்கள்

ஹழ்ரத் அல்லாமா ஜலாலுத்தீன் ஸுயூத்தீ ஷாபிஈ رَحْمَۃُ اللّٰہِ عَلَیْہ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். சங்கையான ஸஹாபாக்கள் عَلَیْہِمُ الرِّضْوَان ஏழு நாட்கள் வரை மரணித்தவர்களின் பெயரில் உணவளிப்பவர்களாக இருந்தார்கள். *(அல்ஹாவி லில் .்.பதாவி லிஸ்ஸுயூத்தி, பாகம் 2, பக்கம் 223)*

உணவு வழங்குவதன் மூலம் ஈஸாலே ஸவாப் செய்வது ஸஹாபாக்களின் சுன்னத் என்பதை அறிந்துக்கொண்டோம். எனவே ஈஸாலே ஸவாபுக்காக வழங்கப்படும் ரஜபுடைய கூண்டே என்பதிலும் சாப்பிடும் பொருட்களே உள்ளன.

## ஸஹாபி தனது தாயின் பெயரில் ஒரு தோட்டத்தை ஸதகா செய்தார்கள்

புகாரி ஷரீஃபில் குறிப்பிடப்பட்டுள்ளது: ஹழ்ரத் ஸய்யிதுனா ஸஅத் பின் உபாதா رَضِیَ اللہ عَنْہُ அவர்களின் தாயார் மரணித்த வேளையில், அவர்கள் நாயகம் صَلَّی اللہ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களிடம் வந்து, யா ரஸூலல்லாஹ் صَلَّی اللہ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم! நான் இல்லாத நேரத்தில் எனது தாயார் வபாத்தாகி விட்டார்கள், நான் அவர்களுக்காக ஸதகா செய்தால், அவர்களுக்கு அதன் மூலம் ஏதேனும் பிரயோஜனம் கிடைக்குமா? எனக்கேட்க, ஆம் என கூறியதும், நான் தாங்களை صَلَّی اللہ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم சாட்சியாக வைத்துக்

கூறுகிறேன், எனது தோட்டம் அவர்களின் பெயரில் ஸதகாவாகும். *(புகாரி, பாகம் 2, பக்கம் 241, ஹதீஸ் 2862)*

உணவு கொடுப்பது மட்டுமன்றி, தோட்டம் அதாவது சொத்து செலவு செய்வதைக் கொண்டும் ஈஸாலே ஸவாப் செய்ய முடியும் என்பது தெரிய வருகிறது. மேலும் கூண்டே ஷரீ஺ப் கொடுப்பதும் பொருட்களை செலவு செய்யும் ஈஸாலே ஸவாபில் அடங்குகிறது. எனது எஜமான் அ஺லா ஹழ்ரத் இமாம் அஹ்மத் ரzஸா கான் رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள். மரணித்த முஸ்லிம்களின் பெயரில் உணவு சமைத்து ஈஸாலே ஸவாபுக்காக செலவு செய்வது சந்தேகமின்றி ஆகுமாக்கப்பட்டதும், விரும்பத்தக்கதுமாகும். அதில் பாத்திஹாவின் மூலம் ஈஸாலே ஸவாப் செய்வது இரண்டாவது விரும்பத்தக்க விடயமாகும். மேலும் இரண்டு விடயங்களை ஒன்று சேர்ப்பது நன்மையை அதிகப்படுத்துவதாகும்.

*(∴பதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 9, பக்கம் 595)*

அனைவருக்கும் சிறந்தது என்னவென்றால், ஸாலிஹான அமல்களை (அதாவது நல்அமல்களை) செய்தால் அதனுடைய நன்மைகளை முன்னோர், பின்னால் வருவோர், ஹயாத்துடன் இருப்போர், மரணித்தோர் (அதாவது ஸய்யிதுனா ஆதம் ஸ∴பிய்யுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام விலிருந்து கியாம நாள் வரை வரக்கூடிய) மு∴மினான ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஹதியா (அதாவது ஈஸாலே ஸவாப்) செய்யுங்கள், அனைவருக்கும் நன்மை கிடைக்கும். மேலும் அவருக்கு (அதாவது ஈஸாலே ஸவாப் செய்தவருக்கு) அனைவர்களது அளவுக்கு நன்மை கிடைக்கும். *(∴பதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 9, பக்கம் 617)*

ஈஸாலே ஸவாப் நல்ல நிய்யத்துடன் செய்ய வேண்டும். பிறருக்கு காண்பிக்கும் நோக்கமோ, அல்லது இலாபம் பெறும் நோக்கமோ

இருக்கக்கூடாது, இல்லையெனில், நன்மையும் கிடையாது, ஈஸாலே ஸவாபும் கிடையாது. அதாவது நன்மையே கிடைக்காதபோது, அது எப்படி போய் சேரும். *(பஹாரே ஷரீஅத், பாகம் 1, பக்கம் 1201, பாகம் 3, பக்கம் 643)*

## நாள் நிர்ணயம் செய்வது

**சந்தேகம்:** 3ம், 40ம் நாள் மேலும் கௌது நாயகத்தின் 11ம் நாள், மீலாத் ஷரீபின் 12ம் நாள் இன்னும் ரஜபின் கூண்டே போன்றவற்றின் பெயரால் ஈஸாலே ஸவாபுக்கான நாட்களை நியமித்து வைப்பதற்குரிய காரணம் என்ன?

**சந்தேக நிவர்த்தி:** ஈஸாலே ஸவாபுக்காக ஒரு காலம், நேரம் ஷரீஅத்தில் குறிப்பிடப்பட வில்லை. ஆனாலும் நாள் போன்றதை குறிப்பிடுவதால் ஷரீஅத்தில் எந்தவொரு தடையும் கிடையாது. நேரத்தை நிர்ணயிப்பது இரண்டு விதமாகும்.

1. ஷர்ஈ: (மார்க்க சட்டம்) மார்க்கம் ஏதாவதொரு வேளைக்கு நேரம் குறிப்பிட்டிருத்தல், உதாரணமாக, குர்பான், ஹஜ் போன்றவை.

உர்ஃபி: (வழக்கம்) சரீஅத்தில் நேரம் ஒதுக்கப்படாமல், மனிதர்கள் தனது மற்றும் மற்றவர்களின் நலன் கருதி அல்லது ஞாபகத்துக்காக அல்லது ஏதாவது முக்கியமான விடயங்களுக்காக நேரகாலத்தை ஒதுக்குவது. எவ்வாறெனில், இப்பொழுது மஸ்ஜித்களில் தொழுகைகளின் ஜமாஅத்துக்காக நேரங்களை ஒதுக்கியிருப்பது போன்றவை. ஏனெனில், ஆரம்பத்தில் ஜமாஅத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை, தொழுகைக்காக மனிதர்கள் ஒன்று சேர்ந்ததும் ஜமாஅத்தை நடாத்துவார்கள். அது மாத்திரமல்ல, சில வேலைகளுக்காக ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தானாகவே நேரகாலங்களை

ஒதிக்கியதுண்டு. அதேபோல் ஸஹாபாக்களும் عَلَيۡهِمُ الرِّضۡوَان இன்னும் வலிமார்கள் رَحِمَهُمُ اللّٰهُ السَّلَام போன்ற பெரியார்களும் இவ்வாறு செய்ததற்கு ஆதாரம் உண்டு. உதாரணமாக,

1. ரஸூல் صَلَّى اللهُ عَلَيۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஒவ்வொரு வருடமும் உஹத் ஷுஹதாக்களின் عَلَيۡهِمُ الرِّضۡوَان கப்ருகளுக்கு செல்லும் நேரத்தை ஒதுக்கியிருந் தார்கள். *(முஸன்னிஃப் அப்துர் ரஸ்ஸாக், பாகம் 3, பக்கம் 381, ஹதீஸ் 6745)*

2. சனிக்கிழமையன்று ரஸூல் صَلَّى اللهُ عَلَيۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மஸ்ஜிதுல் குபாவுக்கு சமூகமளிப்பது. *(முஸ்லிம், பக்கம் 724, ஹதீஸ் 1399)*

3. இன்னும் அபூபக்கர் ஸித்தீக் رَضِیَ اللّٰهُ عَنۡهُ அவர்களுடன் தீனுடைய கலந்துரையாடலுக்காக காலை, மாலை நேரங்களை நியமித்தல். *(புகாரி, பாகம் 1, பக்கம் 180, ஹதீஸ் 476)*

4. ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் رَضِیَ اللّٰهُ عَنۡهُ அவர்கள் உபதேசம் (பயான்) செய்வதற்காக வியாழக் கிழமையை நியமித்திருந்தார்கள். *(புகாரி, பாகம் 1, பக்கம் 42, ஹதீஸ் 70)*

5. மேலும் உலமாக்கள் பாடங்களை ஆரம்பிக்க புதன் கிழமையை வைத்துள்ளார்கள். *(தஃலீமுல் முதஅல்லிம், பக்கம் 72) (இவை பதாவா ரZஸவிய்யா முகர்ரஜாவிலிருந்து சேகரிக் கப்பட்டதாகும், பாகம் 9, பக்கம் 585, 586)*

## அத்தாரின் கடிதம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم

ஸகே மதீனா (அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் அவர்கள் மதீனா ஷரீஃபின் முஹப்பத்தில் மூழ்கி தம்மை தாழ்த்தும் விதமாக தமக்குத்தாமே ஸகே மதீனா (அதாவது மதீனாவின் நாய்) என்று கூறிக்கொள்வார்கள்) முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரZஸவி عُفِيَ عَنْهُ அவர்களின் புறத்திலிருந்து, அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகள், மத்ரஸதுல் மதீனா மற்றும் ஜாமிஅதுல் மதீனாவின் உஸ்தாத்மார்கள், மாணவ, மாணவிகள் இன்னும் முஅல்லிமாக்களுக்கு, சங்கையான கஃபாவின் பக்கமாக சுற்றி, கும்பதே ஹZஸ்ராவை (பச்சை குBப்பாவை) முத்தமிட்டுக் கொண்டு, ரஜப், ஷஃபான் இன்னும் ரமழான் மாத

நோன்பாளிகளின் பரகத்தால் நிரம்பிய மகிழ்ச்சியான ஸலாம்,

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَ رَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهٗ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ عَلٰى كُلِّ حَالٍ

اَلْحَمْدُ لِلّٰه! மீண்டும் ஒருமுறை சந்தோஷமான நாட்கள் வருகிறது. ரஜப் மாதத்தின் வருகை நெருங்கிக்கொண்டிருக் கிறது. இந்த சங்கையான மாதத்தில் இபாதத்துடைய விதை நட்டப்பட்டு, ஷ:்பான் மாதத்தில் வெட்கத்தின் கண்ணீரால் நீர் பாய்ச்சப்பட்டு, முபாரக்கான ரமழானில் ரஹ்மத் எனும் விளைச்சல் வெட்டப்படுகிறது.

## மூன்று மாத நோன்புகள்

ரஜப் மாதத்தை சங்கைப்படுத்துபவர்களே! கற்றல், கற்றுக் கொடுத்தல், ஹலாலான வியாபாரங்களில் இடைஞ்சல் ஏற்படாவிட்டால், தாய் தந்தையும் காரணமின்றி தடுக்கா விட்டால், யாருடைய உரிமை மீறலும் ஏற்படாவிட்டால்,

அவசர அவசரமாக, தொடர்ந்து மூன்று மாதங்கள் அல்லது முபாரக்காள ரமழான் மாதத்தின் பர்ளான அனைத்து நோன்புகளையும் நோற்பதோடு, யாரால் எவ்வளவு முடியுமோ அந்தளவு நஃபிலான நோன்புகளை நோற்பதற்கு தயாராகுங்கள். ஸஹர் மற்றும் இஃப்தாருடைய நேரங்களில் கொஞ்சமாக சாப்பிட்டு வயிற்றுக்கு குஃப்லே மதீனா (மதீனத்துப் பூட்டை) போட்டுக் கொள்ளுங்கள். அனைத்து வீடுகளிலும் இன்னும் நமது அனைத்து மத்ரஸாக்கள், ஜாமிஆக்களிலும் நோன்பின் வசந்தங்கள் வரவேண்டுமே! ஆகையால் ரஜப் மாதத்தின் முதல் நாளிலிருந்தே நோன்பை ஆரம்பித்து விடுங்கள்.

## ரஜபுடைய ஆரம்ப மூன்று நோன்புகளின் மகிமை

ரஜபுடைய ஆரம்ப மூன்று நோன்புகளின் மகிமையை என்ன வென்று கூறுவது! ஈருலக அருளாளர், பாவிகளுக்கு பரிந்துரை செய்பவர்,

நபி பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அப்பாஸ் رَضِیَ اللّٰہُ عَنۡہُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள். “ரஜப் மாதத்தின் முதலாவது நாளின் நோன்பு மூன்று வருடங்களுக்குப் பரிகாரமாகும், இரண்டாவது நாளின் நோன்பு இரண்டு வருடங்களுக்கும், மூன்றாவது நாளின் நோன்பு ஒரு வருடத்திற்கும் பரிகாரமாகும். பின்பு ஒவ்வொரு தினங்களின் நோன்பும் ஒரு மாதத்திற்குப் பரிகாரமாகும்.” *(அல்ஜாமிஉஸ் ஸஙீர் லிஸ் ஸுயூத்தி, பக்கம் 311, ஹதீஸ் 5051 - ஃபழாயிலு ஷஹ்றி ரஜப் லில் கல்லால், பக்கம் 64)*

*நான் பாவி பாவங்களின்றி என்னதான் கொண்டு வருவேன்*
*நன்மைகள் நாயகமே நல்லடியார்களிடமே இருக்கிறது*

صَلُّوْا عَلَى الْحَبِيْب　　صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

நஃபிலான நோன்பின் வசந்தங்களும் நிறைய உள்ளன. அது தொடர்பாக இரண்டு ஹதீஸ்களை பாருங்கள்.

## 1. மலக்குகள் பிழை பொறுக்க துஆ செய்வார்கள்

ஹழ்ரத் ஸய்யிததுனா உம்மு உமாரா رَضِیَ اللّٰہ عَنۡہَا அவர்கள் கூறுகிறார்கள். ஒருமுறை ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் என் வீட்டுக்கு வருகை தந்தார்கள், நான் அன்னவர்களின் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم முன்னிலையிலே உணவு வைத்தபோது “நீயும் சாப்பிடு” எனக்கூறினார்கள். நான் நோன்பாளியாக இருக்கிறேன் என பதில் சொன்னதும், அன்னவர்கள் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم கூறினார்கள், எதுவரை நோன்பாளியின் முன் உணவு உண்ணப்படுமோ அதுவரை மலக்குகள் அவருக்காக (நோன்பாளிக்காக) பிழை பொறுப்பின் துஆ செய்துக்கொண்டே இருப்பார்கள். *(ஸுனன் திர்மிதி, பாகம் 2, பக்கம் 205, ஹதீஸ் 785)*

## 2. நோன்பாளியின் எழும்புகள் எப்போது தஸ்பீஹ் செய்யும்

ஹழ்ரத் ஸய்யிதுனா பிலால் رَضِیَ اللّٰہ عَنۡہُ அவர்கள் நபியே அக்ரம் நூரே முஜஸ்ஸம் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

அன்னவர்களின் திருசமூகத்திற்கு வருகை தந்தபோது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பிலாலே! சாப்பிடுங்களேன், என கூறியபோது, யா ரஸூலல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم நான் நோன்பாளியாக இருக்கிறேன் என பதிலளித்தார்கள், அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், “நாம் நமது உணவை உண்ணுகிறோம், பிலாலுடைய ரிஸ்க் சுவனத்தில் அதிகரிக்கிறது.” பிலாலே! உங்களுக்கு தெரியுமா எதுவரை நோன்பாளிக்கு முன்னால் ஏதாவது சாப்பிடப்படுகிறதோ, அதுவரை அவரது எழும்புகள் தஸ்பீஹ் செய்கின்றன, அவருக்கு மலக்குகள் துஆ செய்கிறார்கள். *(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 297, ஹதீஸ் 3586)*

பிரசித்திபெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகி றார்கள், சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது யாராவது வந்தால்

அவரையும் சாப்பிட அழைப்பது ஸுன்னத்தான காரியம் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. ஆனால் பொய் உபசரிப்பின்றி உள்ளத்தால் அழைக்க வேண்டும். மேலும் வருபவர்களும் எனக்கு பசி இல்லை என பொய் சொல்லக்கூடாது. ஏனெனில் பொய்யும், பசியும் ஒன்று சேரக்கூடாது. மாறாக (சாப்பிடாவிட்டால், அல்லது) உணவு குறைவாக இருப்பதைக் கண்டால் بَارَكَ الله (அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ பரகத் அளிப்பானாக) என்று கூற வேண்டும். மேலும் இதுவும் தெரிய வருகிறது, அதாவது ஈருலக அருளாளர், நபிபெருமானார் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களிடம் தனது இபாதத்துக்களை மறைக்காமல் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் கண்மணி ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அதற்கு சாட்சியாளர்களாக ஆகி விடுவார்கள். இந்த வெளிப்பாடு **முகஸ்துதி** அல்ல. (ஹழ்ரத் ஸய்யிதுனா பிலால் அவர்களின் நோன்பைப்பற்றி கேள்விப்பட்டவுடன் என்ன கூறினார்களோ அதன் விளக்கம்

இதுவாகும்) அதாவது இன்றைய உணவை நாங்கள் இங்கு சாப்பிடுகிறோம், ஆனால் ஹழ்ரத் பிலால் رَضِيَ اللهُ عَنْهُ அதற்குப் பகரமாக சுவனத்தில் சாப்பிடுவார்கள். அந்தப் பகரம் (பதில்) இதை விட சிறந்ததாகவும், அதிகமான தாகவும் இருக்கும். ஹதீஸ் தனது வெளிப்படையான அர்த்தத்திலேயே உள்ளது. உண்மையிலே அந்த நேரத்தில் நோன்பாளியின் அனைத்து எழும்புகள், மூட்டுகள் இன்னும் நரம்புகளும் தஸ்பீஹ் (அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ வை தூய்மை) செய்துக் கொண்டிருக்கும், அது நோன்பாளிக்கு தெரியா விட்டாலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அதை நன்கு செவிமடுக்கிறார்கள். *(மிர்ஆத், பாகம் 3, பக்கம் 202)*

ஆரம்பத்தில் வாசித்திருந்தாலும், திரும்பவும் (1) “க.்.பன் மீண்டது ரஜப் மாதத்தின் வசந்தங்களுடன்” இன்னும் (2) “அண்ணலாரின் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم மாதம்” எனும் இந்த இரண்டு சிறுநூல்களையும் வாசித்துக் கொள்ளுங்கள். அதேபோல் ஒவ்வொரு

வருடமும் ஷஃபானுடைய மாதத்தில் ஃபைஸானே ஸுன்னத் முதலாம் பாகத்தின் ஒரு பகுதியாகிய “ஃபைஸானே ரமழான்” எனும் நூலையும் கட்டாயம் வாசித்துக் கொள்ளுங்கள். முடியுமானால், ஈத் மிஃராஜுன் நபி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم உடைய தொடர்பில் 127 அல்லது 27 அல்லது முடியுமான அளவு ஃபைஸானே ரமழானை பங்கீடு செய்து, அதிகமான நன்மைகளை பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் பொதுவாக அனைத்து இஸ்லாமிய சகோதரர்களிடமும், விஷேசமாக ஜாமிஅதுல் மதீனா இன்னும் மத்ரஸதுல் மதீனாக்களைச் சார்ந்த அனைத்து காரிமார்கள், உஸ்தாத்மார்கள், பொறுப்புதாரிகள் இன்னும் மாணவர்களிடமும் கவலையுடன் கேட்டுக் கொள்வது, தயவுசெய்து (எனது ஹயாத்திலும் வபாத்துக்குப் பிறகும்) ஸகாத், ஃபித்ரா, குர்பானின் தோள்கள், ஏனைய நன்கொடைகளை ஒன்று சேர்ப்பதில் மும்முரமாக செயல் படுங்கள். (இஸ்லாமிய சகோதரிகள் ஏனைய இஸ்லாமிய சகோதரிகளுக்கும்,

மஹ்ரமானவர்களுக்கும் நன்கொடைகளை வழங்குமாறு உற்சாகமூட்டுங்கள்) அல்லாஹ்வின் மீது ஆணையாக! முபாரக்கான ரமழான் மாதத்தில் தன் கிராமங்களுக்கு, ஊர்களுக்கு செல்லும் ஆசையை தியாகம் செய்து ஜாமிஆக்களில் தங்கி, தனது மஜ்லிஸுடைய உபதேசத்துக்கு அடிபணிந்து ஷந்தா (நன்கொடை) வசூலிக்கும் இடங்களின் பொறுப்புக்களை பாரமெடுக்கும் உஸ்தாத்மார்களையும், மாணவர்களையும் பற்றி கேள்விப் படும்போது எனக்கு மிகவும் சந்தோஷம் ஏற்படுகிறது. எந்த உஸ்தாத்மார்கள் மற்றும் மாணவர்கள் எந்தவொரு இடைஞ்ச லும் இல்லாமல், பொடுபோக்குத்தனமாக, ஆர்வமின்மையை வெளிப்படுத்துகின்றார்களோ அவர்களால் எனது உள்ளம் அழுகிறது.

**விஷேசமான மதனி முத்துக்கள்**: ஷந்தா (நன்கொடை) வசூலிப்பதற்காக முன்வரும் அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளும் ஷந்தாவுடைய அத்தியாவசியமான சட்ட

திட்டங்களை அறிந்திருப்பது பர்ழாகும். அனைவருக்கும் ஒரு முக்கியமான வேண்டுகோள், அதாவது ஆரம்பத்தில் நீங்கள் படித்திருந்தாலும், த஼வதே இஸ்லாமியின் பதிப்பகமான மக்தஙதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 107 பக்கங்கள் அடங்கிய “ஷந்தே கே ஙாரே மே ஸூவால் ஜவாப்” எனும் நூலை மீண்டும் படித்துக் கொள்ளுங்கள். யாஅல்லாஹ் عَزَّوَجَلَّ ரமழான் மாதத்தில் ஷந்தாவும், ஹஜ்ஜுப் பெருநாளில் தோள்களை சேர்ப்பதற்கு முயற்சி செய்து எனது உள்ளத்தை சந்தோசப்படுத்தக்கூடிய ரஸூல் صَلَّى اللّٰه عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நேசர்களுடன் நீயும் நிரந்தரமாக சந்தோசப்படுவாயாக, அவர்களின் பொருட்டால் பாவிகளின் தலைவனான என்னையும் நிரந்தரமாக பொருந்திக் கொள்வயாக. யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! எந்த இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் (தடையில்லா பட்சத்தில்) ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்கள் நோன்பு நோற்று, ஒவ்வொரு

வருடமும் ஜமாதுல் ஆகிரில் “க.ஃபன் மீண்டது” எனும் சிறுநூலையும், ரஜப் மாதத்தில் “அண்ணலாரின் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم மாதம்” எனும் சிறுநூலையும் இன்னும் ஷஃபானில் ஃபைZஸானே ரமழான் எனும் நூலையும் (முழுமையாக) வாசித்து அல்லது வாசிக்கக் கேட்கும் பாக்கியத்தை பெற்றுக் கொள்கிறார்களோ அவர்களுக்கும், எனக்கும் இம்மை மறுமையின் பாக்கியங்களை தந்தருள்வாயாக, மேலும் எங்களை கேள்வி கணக்கின்றி மன்னித்து, ஜன்னதுல் ஃபிர்தௌஸில் தனது அன்பர் எங்கள் நாயகம் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அயல்வீட்டாளர் களாக இருக்கும் பாக்கியத்தை தந்தருள்வாயாக.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

## மி஼ராஜுன் நபி ﷺ

த஼வதே இஸ்லாமியின் தலைமையில் ரஜப் மாதம் 27ம் இரவு மி஼ராஜுன் நபி صَلَّى الله عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم தொடர்பாக நடாத்தப்படும் திக்ர், கஸீதாவின் இஜ்திமாவில் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களும், ஆரம்பம் முதல் கடைசி வரை கலந்துக் கொள்ளுங்கள். அதேபோல் 27ம் நாளின் நோன்பை நோற்று 60 மாத நோன்பின் நன்மையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

*ரஜபுடைய வசந்தங்களின் பொருட்டால் ஆக்கிவிடு*
*நம்மை நாயக அன்பர்களாக இறைவனே*

## கண்களை பாதுகாத்துக் கொள்ள மதனி முத்துக்கள்

ஐவேளை தொழுகைக்குப் பின் வலது கையை நெற்றியில் வைத்து 'يَا نُوْرُ' என்று 11 தடவைகள் ஒரே மூச்சில் கூறி, இரண்டு கைகளின் அனைத்து விரல்களிலும் ஊதி

கண்களில் தடவிக் கொள்ளுங்கள், اِنْ شَآءَاللّٰه பார்வை இல்லாமை, மங்கலான பார்வை மேலும் கண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கும். அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய ரஹ்மத்தைக்கொண்டு குருட்டுத் தன்மையும் தூரமாகலாம்.

**மதனி வேண்டுகோள்:** இந்த கடிதத்தை ஒவ்வொரு வருடமும் ஜமாஅதுல் ஆகிர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமை ஸுன்னத்துக்கள் நிறைந்த வாராந்த இஜ்திமாவிலும், ஜாமிஅதுல் மதீனா மற்றும் மத்ரஸதுல் மதீனாக்களிலும் வாசித்துக் காட்டுங்கள். (இஸ்லாமிய சகோதரிகள் தேவைக் கேற்றவாறு மாற்றிக்கொள்ளுங்கள்.)

وَالسَّلَامُ مَعَ الْاِكْرَامِ

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

الحمد لله رب العلمين والصلوة والسلام على سيد المرسلين اما بعد فاعوذ بالله من الشيطن الرجيم بسم الله الرحمن الرحيم

## நல்ல தொழுகையாளியாக ஆகுவதற்காக

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மஃரிப் தொழுகையை தொடர்ந்து உங்கள் பிரதேசத்தில் நடைபெறுகின்ற **தஃவதே இஸ்லாமியின்** சுன்னத்துக்கள் நிறைந்த வாராந்த இஜ்திமாவில் இறைவனின் திருப்பொருத்தத்திற்காக நல்ல நல்ல எண்ணங்களுடன் முழு இரவையும் கழியுங்கள் ﷺ சுன்னத்துக்களின் பயிற்சிக்காக **மதனீ காஃபிலாவில்** நாயகத்தின் ஆஷிக்களுடன் மாதந்தம் மூன்று நாட்கள் பிரயாணமும் செய்யும் ﷺ தினமும் **"ஃபிக்ரே மதீனா"** வின் மூலம் **மதனீ இன்ஆமாத்** பதிவேட்டை நிரப்பி ஒவ்வொரு இஸ்லாமிய மாதத்தின் ஆரம்ப பத்து நாட்களுக்குள் உங்கள் பிரதேச பொறுப்புதாரியிடம் ஒப்படைக்கும் வழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

**எனது மதனீ நோக்கம்:** "நான் என்னையும், உலக மக்கள் அனைவரையும் சீர்திருத்துவதற்காக முயற்சி செய்வேன்" ان شاء الله عزوجل.

தனது சீர்திருத்தத்திற்காக **"மதனீ இன்ஆமாத்"** பிரகாரம் அமலும் செய்யும் உலக மக்களுடைய சீர்திருத்தத்தின் முயற்சிக்காக **"மதனீ காஃபிலா"**வில் பிரயாணமும் செய்ய வேண்டும். ان شاء الله عزوجل.



MC 1286

Aalami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagaran
Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan.
UAN: +92 21 111 25 26 92 | Ext: 1262
Web: www.dawateislami.net | E-mail: translation@dawateislami.net